# Tnpsc Model Question Paper 24 – General Studies in Tamil

Click Here to Download More Tnpsc Model Questions

1. கேதோடு கதிர் அலைநோக்கி (CRO) கீழ்கண்ட எதற்கு பயன்படுகிறது
(அ) AC மின்னழுத்தத்தின் அலைவடிவத்தை காண
(ஆ) வெவ்வேறு இசைக் கருவிகளிலிருந்து வரும் ஒலியின் அலைவடிவத்தை காண
(இ) சிறு AC மற்றும் DC மின்னழுத்தங்களை காண
**(ஈ) மேற்கண்ட அனைத்தும்**

2. காந்தவியல் விளைவின் மாற்று --------- ஆகும்
(அ) தாம்சன் விளைவு **(ஆ) வில்லாரி விளைவு** (இ) க்யூரி விளைவு (ஈ) பிட்டர் பொடி விளைவு

3. பைரோமீட்டர் --------- விதியின் அடிப்படையில் வேலை செய்கிறது
**(அ) ஸ்டீபன் விதி** (ஆ) சார்லஸ் விதி (இ) பாயில் விதி (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

4. எடைக்கும் ஈர்ப்பியல் நிறைக்கும் இடையேயுள்ள தொடர்பு
**(அ) w = mg** (ஆ) m = wg (இ) m = g/w (ஈ) w = m/g

5. நடனம் ஆடுதல், பேருந்தை ஓட்டுதல் மற்றும் எழுதுதல் என்பவை எந்த கற்றல் புலநிலைக்கு எடுத்துக்காட்டு
(அ) இயந்திரக் கற்றல் புலம் (ஆ) அறிவுக் கற்றல் புலம்
(இ) உளம் சார்ந்த கற்றல் புலம் **(ஈ) செயல்பாடு சார்ந்த கற்றல் புலம்**

6. வௌவால்களில் வியர்வை சுரப்பிகள் காணப்படும் இடம்
**(அ) தலையின் பக்கவாட்டில்** (ஆ) வயிறு (இ) காதுகள் (ஈ) கண்கள்

7. மனிதனின் பல் சூத்திரம்
(அ) 0033/3133 (ஆ) 2033/1023 **(இ) 2123/2123** (ஈ) 1003/1003

8. குறிப்பிட்ட பகுதியைச் சார்ந்த பூர்வகுடி மக்கள் பயன்படுத்தும் தாவர பயன்பாடுகள் பற்றி அறியும் படிப்பிற்கு என்ன பெயர்?
(அ) டாக்சானமி **(ஆ) எத்தனோபாட்டனி** (இ) ஆந்தரபோலாஜி (ஈ) போமாலஜி

9. "திராவிடநாடு" என்ற அரசியல் இதழின் ஆசிரியர் யார்?
**(அ) C.N.அண்ணாதுரை** (ஆ) M.கருணாநிதி
(இ) J.ஜெயலலிதா (ஈ) M.G.இராமச்சந்திரன்

10. "நவசக்தி" என்ற தமிழ் வார பத்திரிக்கையை தொடங்கியவர்
**(அ) வி.கல்யாண சுந்தரம்** (ஆ) இ.வே.ராமசாமி
(இ) வ.வே.சுப்ரமணியன் (ஈ) வ.உ.சிதம்பரம்

11. பிரம்மஞான சபையின் தலைமையிடம் அமைந்திருந்த இடம்
(அ) கல்கத்தா (ஆ) டெல்லி **(இ) மெட்ராஸ்** (ஈ) பம்பாய்

12. பாளையக்காரர்களை அவர்களின் ஆட்சிப் பகுதிகளோடு சரியாகப் பொருத்துக:
(அ) கட்டபொம்மன் 1. திண்டுக்கல்
(ஆ) கோபால நாயக் 2. கோயம்பத்தூர்
(இ) மருதுபாண்டியன் 3. பாஞ்சாலங்குறிச்சி
(ஈ) கேரள வர்மா 4. சிவகங்கை
அ ஆ இ ஈ

| | | | | |
|---|---|---|---|---|
| அ. | 3 | 4 | 2 | 1 |
| ஆ. | 2 | 4 | 1 | 3 |
| **இ.** | **3** | **1** | **4** | **2** |
| ஈ. | 2 | 1 | 4 | 3 |

13. நபர்களை, இடங்களுடன் பொருத்துக:

(அ) ஊமைத்துறை 1. ஓடாநிலை
(ஆ) மருது சகோதரர்கள் 2. திருமயம்
(இ) அழகுமுத்துக்கோன் 3. காளையார் கோவில்
(ஈ) தீரன் சின்னமலை 4. கட்டாலங்குளம்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 2 | 4 | 1 |
| **ஆ.** | **2** | **3** | **4** | **1** |
| இ. | 4 | 1 | 2 | 3 |
| ஈ. | 1 | 2 | 3 | 4 |

14. உழவுத் தொழில் செய்கின்றவர்கள் உலக மக்களைக் காப்பதில் எதைப் போன்றவராக வள்ளுவர் கருகிறார்?

(அ) ஏணி போன்றவராக (ஆ) உயிர்களைக் காக்கும் கடவுளாக
(இ) உயிர் நண்பராக **(ஈ) தேருக்கு அச்சாணி போன்றவர்**

15. மலையாள மொழியில் இயற்றப்பட்ட "அக்னிசாட்சி" என்ற நூலைத் தமிழின் "அக்னிசாட்சி" என்ற பெயரில் மொழிபெயர்த்ததற்காக சாகித்ய அகாதெமி பரிசு பெற்றவர்

(அ) மு.கு.ஜகந்நாதராஜா (ஆ) தமிழ்நாடன்
**(இ) சிற்பி பாலசுப்ரமணியம்** (ஈ) நீலுபத்மநாபன்

16. மு.வ.வின் சாகித்திய அகாடமி விருது பெற்ற நூல் எது?

(அ) வாடாமலர் (ஆ) கயமை (இ) கரித்துண்டு **(ஈ) அகல்விளக்கு**

17. பின்வருவனவற்றில் புதிய கற்காலம் குறித்து தவறான கூற்று எது?

1. புதிய கற்கால மனிதர்கள் வேட்டையாடுதல், மீன்பிடித்தல் கால்நடை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டனர்
2. புதிய கற்கால மனிதர்களின் வீடுகள் சதுர வடிவிலும், கூரை கூம்பு வடிவிலும் அமைந்திருந்தது.
3. புதிய கற்கால பெண்கள் மணிகளை ஆபரணங்களாக அணிந்திருந்தனர்
4. பானை வனைதல் புதிய கற்கால மனிதர்களின் கைத்தொழிலாக இருந்தது

(அ) 1 சரி 2, 3, 4 தவறானது (ஆ) 1, 2 சரி 3, 4 தவறானது
(இ) 1, 2, 3 சரியனாது 4 மட்டும் தவறானது **(ஈ) 1, 3, 4 மட்டும் சரியானது, 2 தவறானது**

18. "தம்பிரான் தோழர்" எனப் போற்றப்படுபவர் யார்?

(அ) நாவுக்கரசர் (ஆ) ஞானசம்பந்தர் **(இ) சுந்தரர்** (ஈ) மாணிக்கவாசகர்

19. கும்பேசர் குறவஞ்சியைப் பாடியவர்

(அ) குரைகுருபரர் (ஆ) சிவகொழுந்து தேசிகர்
**(இ) பாபநாச முதலியார்** (ஈ) வேதநாயக சாஸ்திரியார்

20. பெண்பாற் புலவர்களின் பாடல்கள் இடமபெறாத நூல்

**(அ) ஐங்குறுநூறு** (ஆ) குறுந்தொகை (இ) நற்றிணை (ஈ) அகநானூறு

21. "பிறப்பு ஓர் அன்ன உடன் வயிற்று உள்ளும்,
சிறப்பின் பாலால், தாயும் மனம் திரியும்"
– எனும் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும் கருத்து யாது?

(அ) பாசம் **(ஆ) கல்வி** (இ) செல்வம் (ஈ) வீரம்

winmeen.com

22. ரோமானிய தொழிற்சாலை கண்டெடுக்கப்பட்ட இடம்
**(அ) அரிக்கமேடு** (ஆ) ஆதிச்சநல்லூர் (இ) கீழடி (ஈ) பூம்புகார்

23. எந்த அதிதீவிர வைதீக நடவடிக்கைகளில் ஈடுபட்ட சைவ முனிகளின் பெயர் மணிமேகலையில் குறிப்பிடப்பட்டுள்ளது?
(அ) சங்கியர் **(ஆ) காபாலிகர்** (இ) வைசேஷிகர் (ஈ) அஜ்விக்கா

24. அன்னிய நேரடி முதலீட்டை ஈர்க்க தமிழ்நாடு அரசு எடுத்துள்ள பின்வரும் நடவடிக்கைகளைத் தேர்ந்தெடுக்கவும்
1. தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு உயர்மட்டக்குழு
2. தமிழக தொழில் வழிகாட்டு மையத்தில் பிரத்யேக பிரிவுகள்
3. ஒற்றைச் சாளர அனுமதி முறை
4. முதல்வரின் தலைமையிலான ஒரு உயர்மட்டக்குழு
(அ) 1 மற்றும் 2 (ஆ) 2 மற்றும் 4 (இ) 1, 2 மற்றும் 3 **(ஈ) 1, 2, 3 மற்றும் 4**

25. தமிழ்நாட்டு மின்சக்தி வழங்கல் தேவைகள் அனல், புனல், அணு உலைகள் மூலமாக கிடைக்கிறது. பின்வருபவைகளை பொருத்துக:

| | |
|---|---|
| அ. அனல் | 1. கல்பாக்கம், கூடங்குளம் |
| ஆ. புனல் | 2. கயத்தார் |
| இ. அணுஉலை | 3. மரவக்கண்டி, கீழ்மேட்டூர் நெல்லிதுறை |
| ஈ. காற்றாலை ஆற்றல் | 4. தூக்குக்குடி, மேட்டூர் |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **4** | **3** | **1** | **2** |
| ஆ. | 2 | 4 | 3 | 1 |
| இ. | 1 | 2 | 4 | 3 |
| ஈ. | 3 | 2 | 1 | 4 |

26. "காவலன்" செயலி தமிழக காவல் துறையின் முன் முயற்சி. இதன் முக்கிய இலக்கு குழுவானது.
(அ) ஆண்கள் **(ஆ) பெண்கள்** (இ) குழந்தைகள் (ஈ) பெற்றோர்கள்

27. உழவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்கும் திட்டத்தை அமல்படுத்தியது யாருடைய அரசு?
(அ) எம்.ஜி.ஆர் (ஆ) சி.என்.அண்ணாதுரை **(இ) மு.கருணாநிதி** (ஈ) இதில் ஏதும் கிடையாது

28. சமூக வளங்களை சமமற்ற வடிவங்களாக பகிர்வது பொதுவாக எவ்வாறு அழைக்கப்படுகிறது?
**(அ) சமூக சமத்துவமின்மை** (ஆ) பொருளாதார சமத்துவமின்மை
(இ) சமூக சமத்துவம் (ஈ) பொருளாதார சமத்துவம்

29. பின்வரும் கூற்றுக்களை கவனிக்க:
1. சுயமரியாதை இயக்கம் என்பது முக்கிய பதவிகளில் இருந்த உயர் சாதிக்கு எதிரான சமூக போராட்டம்
2. சுயமரியாதை இயக்கம் அரசியல் சுதந்திரத்தை பெறுவதை விட சமூக சுதந்திரத்திலே அதிக ஈடுபாடு கொண்டிருந்தது.
மேற்கண்ட கூற்றுக்களில் எது சரியானது?
(அ) 1 மட்டும் (ஆ) 2 மட்டும் **(இ) 1 மற்றும் 2 இரண்டுமே** (ஈ) 1ம் அல்ல 2ம் அல்ல

30. பின்வரும் துறைகளில் ---------ல் DANIDA – TNAHCP தமிழ்நாட்டின் முயற்சியாகும்
**(அ) ஆரோக்கியம்** (ஆ) உள்கட்டமைப்பு (இ) தொழில் (ஈ) கல்வி

31. பின்வருவனவற்றில் எதற்காக மகாத்மா காந்தியின் சமுதாயக் கல்லூரி தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது.
(அ) மிகக்குறைந்த கல்வி வீதங்கள் கொண்ட மாவட்டங்கள்
(ஆ) மிக அதிகமான தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மலைவாழ் மக்கள் (SC & ST) கொண்ட மாவட்டங்கள்
**(இ) சிறை கைதிகளுக்கு சிறையில் தொழிற்பயிற்சி அளித்தல்**

(ஈ) சிறிய கிராமங்கள்

32. பின்வரும் அட்டவணைக் குறியீடுகளிலிருந்து சரியான விடையினை அட்டவணை–I லிருந்து (முதலீட்டு வகைகள்) அட்டவணை II உடன் (முதலீட்டு இயல்புகள்) பொருத்துக:

அட்டவணை I – அட்டவணை II

அ. நேரடி வெளிநாட்டு முதலீடு (FDI) – 1. நாட்டின் பங்குகள், பத்திரங்கள் மற்றும் பணம் இவைகளை வெளிநாட்டவர்கள் கொள்முதல் செய்தல்

ஆ. வெளிநாட்டு துறை சார்ந்த முதலீடு – 2. வெளிநாட்டு மூலதனத்தினால் நாட்டின் உற்பத்தி சொத்துக்களை உருவாக்கல்

இ. வணிக கடன்கள் – 3. வெளிநாட்டு நிதி நிறுவனங்களிலிருந்து கடன் உருவாக்கல்

ஈ. வெளிநாட்டு நிறுவன உதவிகள் – 4. வெளிநாட்டு நிறுவனங்கள் நிதி உதவி அளித்தல்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 1 | 3 | 2 |
| ஆ. | 2 | 3 | 1 | 4 |
| **இ.** | **2** | **1** | **3** | **4** |
| ஈ. | 4 | 3 | 1 | 2 |

33. இந்திய மாநிலங்களிலேயே தமிழ்நாடு மிகப்பெரிய திறன் ––––––––ல் கொண்டுள்ளது.

(அ) சர்க்கரை (ஆ) சிமெண்ட் **(இ) புதுப்பிக்கதக்க ஆற்றல்** (ஈ) உரம்

34. ஓர் அசல் ஆண்டுக்கு 10% வட்டி வீதத்தில் 5 ஆண்டுகளில் ரூ.10, 050 ஆக உயர்ந்தது எனில் அசல் எவ்வளவு?

(அ) ரூ.7, 000 (ஆ) ரூ.6, 500 **(இ) ரூ.6, 700** (ஈ) ரூ.6, 900

35. ஓர் இரு சக்கர வாகனத்தின் விலை 2 ஆண்டுகளுக்கு முன்பு ரூ.70, 000 ஆக இருந்தது. அதன் மதிப்பு ஆண்டுதோறும் 4% வீதம் குறைகிறது எனில், அதன் தற்போதைய மதிப்பைக் காண்க:

(அ) ரூ.64, 000 **(ஆ) ரூ.64, 512** (இ) ரூ.65, 512 (ஈ) ரூ.64, 412

36. c = kd என்பதில் c–க்கும் d–க்கும் இடையேயான உறவு என்ன? (இங்கு k மாறிலி)

**(அ) நேர்விகிதம்** (ஆ) எதிர் விகிதம் (இ) சம விகிதம் (ஈ) சமமற்ற விகிதம்

37. 1+2+3+…..+ n = 666 எனில் n–யின் மதிப்பு

(அ) –37 (ஆ) –36 (இ) 37 **(ஈ) 36**

38. 1+3+5+………25 உறுப்புகள் வரை கூடுதல் காண்க:

(அ) 325 (ஆ) 450 (இ) 575 **(ஈ) 625**

39. 5, 11, 23, 47, 95, ––– அடுத்து வரும் எண் காணவும்

**(அ) 191** (ஆ) 171 (இ) 123 (ஈ) 106

40. 2/3, 5/9, 8/27, 11/81, 14/243, ––––––––––?

(அ) 42/329 (ஆ) 17/129 **(இ) 17/729** (ஈ) 17/243

41. மோகன் என்பவர் ஒவ்வொரு சரியான பதிலுக்கு 3 மதிப்பெண்களை பெறுகிறார், தவறான பதிலுக்கு 2 மதிப்பெண்களை இழக்கிறார் அவர் 30 வினாக்களுக்கு விடையளித்து 40 மதிப்பெண்களை பெற்றார் எனில் சரியாக பதில் அளித்த வினாக்களின் எண்ணிக்கையை காண்க:

(அ) 210 (ஆ) 15 **(இ) 20** (ஈ) 25

42. 42 : 56 : : 110 : ?

(அ) 180 **(ஆ) 132** (இ) 136 (ஈ) 140

43. A என்பவர் தனியே ஒரு வேலையை 10 நாட்களிலும் B ஆனவர் தனியே 15 நாட்களிலும் முடிப்பர். அவர்கள் இந்த வேலையை ரூ.2, 00, 000 தொகைக்கு ஒப்புக்கொண்டனர் எனில், A பெறும் தொகை ---------- ஆகும்
(அ) ரூ.1, 00, 000 **(ஆ) ரூ.1, 20, 000** (இ) ரூ.1, 50, 000 (ஈ) ரூ.1, 02, 000

44. P என்பவர் தனியே ஒரு வேலையின் 1/2 பகுதியை 6 நாட்களிலும், Q என்பவர் தனியே அதே வேலையின் 2/3 பகுதியை 4 நாட்களிலும் முடிப்பர். இருவரும் இணைந்து அந்த வேலையின் 3/4 பகுதியை எத்தனை நாட்களில் முடிப்பர்?
(அ) 2 நாட்கள் **(ஆ) 3 நாட்கள்** (இ) 4 நாட்கள் (ஈ) 5 நாட்கள்

45. களிமண் கொண்டு செய்யப்பட்ட 18 செ.மீ உயரமுள்ள ஒரு கூம்பை ஒரு குழந்தை அதே ஆரமுள்ள ஓர் உருளையாக மாற்றுகிறது எனில் உருளையின் உயரம் காண்க:
(அ) 8 செ.மீ **(ஆ) 6 செ.மீ** (இ) 3 செ.மீ (ஈ) 18 செ.மீ

46. ஒரு முக்கோண வடிவிலான மனையின் சுற்றளவு 360 மீ அதன் பக்கங்கள் 3 : 4 : 5 என்ற விகிதத்தில் உள்ளன எனில் அந்த மனையின் பரப்பளவு --------- மீ$^2$
(அ) 30 மீ$^2$ (ஆ) 180 மீ$^2$ (இ) 3600 மீ$^2$ **(ஈ) 5400 மீ$^2$**

47. ஒரு நகரத்தின் மக்கள் தொகை 1997ஆம் ஆண்டு 24, 000. ஆண்டுக்கு 5% வீதம் மக்கள் தொகை அதிகரித்தால் 2000ம் ஆண்டு இறுதியில் அந்த நகரத்தின் மக்கள் தொகை எவ்வளவு?
(அ) 27873 **(ஆ) 27783** (இ) 28773 (ஈ) 28737

48. ஒரு தொகை கூட்டுவட்டியில் 45 வருடங்களில் 8 மடங்கு ஆகின்றது எனில் எத்தனை வருடங்களில் இரு மடங்கு ஆகும்
(அ) 11 1/4 வருடங்கள் (ஆ) 10 வருடங்கள் **(இ) 15 வருடங்கள்** (ஈ) 25 வருடங்கள்

49. குமரவேல் ஒரு குறிப்பிட்டத் தொகைக்கு 10% வட்டி வீதம் 2 ஆண்டுகள் கழித்து ரூ.750யை தனி வட்டியாகச் செலுத்தினால் அசலைக் காண்க:
(அ) ரூ.3, 350 (ஆ) ரூ.3, 450 (இ) ரூ.3, 550 **(ஈ) ரூ.3, 750**

50. எத்தனை ஆண்டுகளில் ரூ.5, 600 ஆண்டுக்கு 6% தனிவட்டி வீதத்தில் ரூ.6, 720 ஆக உயரும்?
(அ) 3 1/4 ஆண்டுகள் (ஆ) 31/2 ஆண்டுகள்
**(இ) 3 1/3 ஆண்டுகள்** (ஈ) 3 1/5 ஆண்டுகள்

51. ஒரு எண் 42 ஆனது 3 :4 என்ற விகிதத்தில் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்படுகிறது. அந்த இரு பாகங்களின் வர்க்கங்களின் கூடுதல் காண்க:
(அ) 1000 **(ஆ) 900** (இ) 600 (ஈ) 500

52. A:B = 8 : 15, B : C = 5 : 8 எனில் C : D + 47 : 5என்ன?
(அ) 8 : 5 (ஆ) 4 : 8 (இ) 8 : 15 **(ஈ) 4 : 15**

53. AT = 20 என்றும் BAT = 40 என்றும் குறிக்கப்பட்டால் CAT எவ்வாறு குறிக்கப்படும்?
(அ) 30 (ஆ) 50 **(இ) 60** (ஈ) 70

54. 400க்கும் 500க்கும் இடையில் 12, 15 மற்றும் 20 ஆகிய எண்களால் வகுபடக்கூடிய எண்கள் எத்தனை உள்ளன.
(அ) ஒன்று **(ஆ) இரண்டு** (இ) மூன்று (ஈ) நான்கு

55. மீ.பொ.வ காண்க:
$x^3-y^3$, $x^2-y^2$, $x^4-y^4$
**(அ) $(x-y)$** (ஆ) $(x^2-y^2)$ (இ) $(x^3-y^3)$ (ஈ) $(x^4-y^4)$

56. 18 மற்றும் 30 என்ற எண்ணில் மீ.பொ.கா மற்றும் மீ.சி.ம இவற்றின் விகிதம் காண்க:
(அ) 3 : 5 **(ஆ) 1 : 15** (இ) 15 : 1 (ஈ) 5 : 3

57. ஓர் எண்ணின் 40% லிருந்து 40ஐக் கழித்தால் 40 கிடைக்கும் எனில், அந்த எண் --------- ஆகும்
(அ) 60 (ஆ) 100 (இ) 150 **(ஈ) 200**

58. மழைக்காலத்தின் போது விற்பனையை அதிகரிக்க கடைக்காரர் ஒருவர் ஒரு மழைச்சட்டையின் விலையை ரூ.1, 060 இலிருந்து ரூ.901 ஆகக் குறைத்தார் எனில், அவர் வழங்கிய தள்ளுபடி சதவீதத்தைக் காண்க:
(அ) 10% (ஆ) 25% (இ) 30% **(ஈ) 15%**

59. தமிழ்நாட்டில் "ஒரே நாடு ஒரே ரேஷன் அட்டை" திட்டம் முதன் முதலாகத் தொடங்கப்பட்ட மாவட்டங்கள் எவை என்பதை தெரிவு செய்க:
1. சென்னை
2. திருநெல்வேலி
3. தூத்துக்குடி
4. கோயம்புத்தூர்
(அ) 1 மற்றும் 4 மட்டும் (ஆ) 2 மற்றும் 4 மட்டும்
(இ) 1 மற்றும் 2 மட்டும் **(ஈ) 2 மற்றும் 3 மட்டும்**

60. பட்ஜெட் வெளியீட்டிற்கு முன் பொருளாதார ஆய்வு இவர் தலைமையில் உள்ள குழுவால் நடத்தப்படும்
(அ) சபா நாயகர் (ஆ) யூனியன் நிதி அமைச்சர்
**(இ) முதன்மைப் பொருளாதார ஆலோசகர்** (ஈ) கவர்னர்

61. காந்த ஒத்ததிர்வு பிம்பமாக்கலில் (MRI) வலிமையான காந்தப்புலத்தை உருவாக்குவதற்கு --------- வரிச்சுருள் பயன்படுத்தப்படுகிறது.
(அ) கடத்தும் (ஆ) கடத்தா **(இ) மீக்கடத்தும்** (ஈ) குறை கடத்தும்

62. சரியான விடையைத் தேர்க:
மஹிலா கிசான் சசக்திகரன் பரியோஜனா (MKSP) திட்டம் பற்றிய கீழ்க்கண்ட கூற்றுகளில் எவை சரியானவை.
1. இத்திட்டம் 2019ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
2. முறையான முதலீடுகளைச் செய்து பெண்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும்.
3. பெண்களை விளையாட்டில் ஈடுபாடு கொள்ளச் செய்தல்.
4. வீட்டில் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதிசெய்தல்.
**(அ) 2 மற்றும் 4 சரி** (ஆ) 2 மற்றும் 3 சரி
(இ) 1 மற்றும் 2 சரி (ஈ) 3 மற்றும் 4 சரி

63. அமெரிக்காவைச் சேர்ந்த ஹெல்த் எஃபெக்ட்ஸ் இன்ஸ்ட்டிடியூட், காற்றின் தரம் மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றை 7000க்கும் மேற்பட்ட நகரங்களில் ஆய்வு செய்ததில், டில்லி முதலிடத்தில் ---------- உள்ளது.
**(அ) PM 2.5** (ஆ) $NO_2$ (இ) $SO_2$ (ஈ) $CO_2$

64. பெண்கள் மேம்பாடு பற்றி பின்வரும் கூற்றுகளில் எது உண்மை?
1. பிரதம மந்திரி முத்ரா யோஜனா மற்றும் ஸ்டாண்ட் மிகு இந்தியா திட்டம் ஆகியவை பெண்கள் சமூகத்திற்கான நடவடிக்கைகளை ஆதரிக்கின்றன.
2. விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாடு முயற்சிகள் மற்றும் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட பிரதான் மந்திரி கிரிஷி சிஞ்சய யோஜனா.
3. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் உஜ்ஜவாலா திட்டங்கள் ஒரு நிறுத்த மையம் மற்றும் பாலின பட்ஜெட்
(அ) 1 மட்டும் **(ஆ) 1 மற்றும் 3 மட்டும்** (இ) 1 மற்றும் 2 மட்டும் (ஈ) 2 மற்றும் 3 மட்டும்

65. இந்தியாவின் பிரபல்யமான அறிவியல் விஞ்ஞானி பீர்பால் சாஹினி ---------- தந்தை என்றழைக்கப்படுகிறார்.

(அ) இனத்தாவரயலின் (ஆ) கருவியலின்
**(இ) தொல் தாவரவியலின்** (ஈ) திசு வளர்ப்பின்

66. பட்டியல் (அ) வில் கொடுக்கப்பட்டுள்ள பழங்குடியினத்தர் பேசும் மொழிகளை பட்டியல் (ஆ) விலுள்ள, அவை பேசப்படும் பிரதேசங்களுடன் ஒப்பிடுக:

| பட்டியல் (அ) | பட்டியல் (ஆ) |
|---|---|
| அ. லமானி | 1. மேற்கு வங்காளம் |
| ஆ. கோட்டா | 2. கர்நாடகம் |
| இ. கொராகா | 3. தமிழ்நாடு |
| ஈ. துலு | 4. கேரளா |

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 3 | 4 | 1 | 2 |
| ஆ. | 4 | 3 | 2 | 1 |
| இ. | 2 | 3 | 1 | 4 |
| **ஈ.** | **3** | **1** | **4** | **2** |

67. இந்திய விமான நிலையங்களின் ஆணையம் (AAI) எப்போது அமைக்கப்பட்டது?
(அ) 1 ஏப்ரல் 1965 (ஆ) 1 ஏப்ரல் 1975 (இ) 1 ஏப்ரல் 1985 **(ஈ) 1 ஏப்ரல் 1995**

68. ரோஸ்வுட் வளரக்கூடிய காடுகள்
(அ) பருவகால காடுகள் **(ஆ) பசுமைமாறாக் காடுகள்**
(இ) ஆல்பைன் காடுகள் (ஈ) ஓதக் காடுகள்

69. ஜெர்சோப்பா நீர்வீழ்ச்சி அமைந்துள்ள நதி
(அ) தப்தி (ஆ) நர்மதா **(இ) சராவதி** (ஈ) பெரியார்

70. இந்திய காலநிலை எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
(அ) வறண்ட காலநிலை (ஆ) துணை துருவ காலநிலை
**(இ) துணை அயனமண்டல காலநிலை** (ஈ) மிதவெப்ப மண்டல காலநிலை

71. பாமினி சுல்தானகத்தில் "தாரப்தார்" என்பது
**(அ) மாகாண ஆளுநர்கள்** (ஆ) இளவரசர் (இ) சேனாபதி (ஈ) குதிரை வீரர்கள்

72. "ரஸம்நாமா" என்பது
**(அ) மஹாபாரதத்தின் பாரசீக மொழிபெயர்ப்பு**
(ஆ) உபநிடதங்களின் உருது மொழிபெயர்ப்பு
(இ) இராமாயணத்தின் பாரசீக மொழிபெயர்ப்பு
(ஈ) கீத கோவிந்தத்தின் பாரசீக மொழிபெயர்ப்பு

73. நன்கு அறியப்பட்ட "பாணிதாணி" ஓவியங்களுக்கு சொந்தக்காரர்கள்
(அ) பண்டி பள்ளிகள் (ஆ) ஜெய்பூர் பள்ளிகள்
(இ) கங்கரா பள்ளிகள் **(ஈ) கிஷன்கர் பள்ளிகள்**

74. சோழர்களின் ஆட்சியில் கூற்றம் என்பது
**(அ) பல கிராமங்கள் கொண்ட தொகுப்பாகும்**
(ஆ) பிராமணர்களின் கல்வி நிலையங்கள்
(இ) மாகாணம்
(ஈ) நகரம் மற்றும் நகரியம்

75. கொடுக்கப்பட்ட அட்டவணை–I மற்றும் அட்டவணை–II பொருந்தி கீழே கொடுக்கப்பட்ட குறியீடுகளில் (code)ல் பொருத்துக:

அட்டவணை–I அரசு அட்டவணை–II தலைநகரம்

அ. நிஜாம் சாஹி 1. கோல்கொண்டா

ஆ. குதுப் சாஹி 2. பிஜப்பூர்

இ. இமாம் சாஹி 3. அகமது நகர்

ஈ. அடில் சாஹி 4. பீரார்

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| **அ.** | **3** | **1** | **4** | **2** |
| ஆ. | 2 | 3 | 1 | 4 |
| இ. | 1 | 2 | 4 | 3 |
| ஈ. | 4 | 2 | 3 | 1 |

76. கீழ்க்காண்பனவற்றுள் பொது நிர்வாக முறையில் மக்களின் பங்கேற்பிற்கு உதவாத வழிமுறை எது?

(அ) தேர்தல் முறை **(ஆ) அரசியல் விருப்பமின்மை**

(இ) திரும்ப அழைக்கும் முறை (ஈ) அழுத்தக் குழுக்கள்

77. ரசியா சுல்தானாவிற்கு எதிராக புரட்சி செய்த இலதுத்மிஷின் பிரத அமைச்சராக இருந்தவர்

**(அ) நிஜாமுல் முல்க் ஜீனைதி** (ஆ) முஹாஜப்புத்தீன்

(இ) ஜமாலுத்தீன் யாகூத் (ஈ) அல்தூனியா

78. பணியாளர் குடியிருப்பு கண்டுபிடிக்கப்பட்ட சிந்து சமவெளி நகரத்தின் பெயர்

**(அ) ஹரப்பா** (ஆ) லோதல் (இ) கலிபங்கன் (ஈ) சான்குதாரோ

79. பாராளுமன்ற நடவடிக்கைகளின் கருவிகளை மேற்கோளாகக் கொண்டு, பின்வரும் கூற்றுகளில் எது சரியானதாகும்?

(அ) பாராளுமன்ற அமர்வின் முதல் ஒரு மணி நேரம் பூஜ்ய நேரமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஆ) சிறப்புரிமை தீர்மானத்தின் நோக்கமானது குறிப்பிட்ட அமைச்சரை கண்டனம் செய்வதற்கு**

(இ) கவன ஈர்ப்பு தீர்மானம் நடைமுறை விதிகளில் குறிப்பிடவில்லை.

(ஈ) நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் மாநிலங்களவை அமைச்சரவையை கலைக்க முடியும்

80. பின்வரும் இந்திய அரசியலமைப்பின் எந்த விதி உச்சநீதிமன்றத்திற்கு சிறப்பு அனுமதி மனுவினை ஏற்கும் அதிகாரத்தை வழங்குகின்றது.

**(அ) விதி 136** (ஆ) விதி 32 (இ) விதி 139 (ஈ) விதி 226

81. இந்தியாவின் முழுமையான இறையாண்மை அதிகாரம் பெற்றிருப்பது

**(அ) இந்திய மக்கள்** (ஆ) இந்திய பிரதமர்

(இ) இந்திய குடியரசுத் தலைவர் (ஈ) தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய தலைவர்கள்

82. உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தும் அமைப்பு --------- ஆகும்

(அ) தேசிய தேர்தல் ஆணையம் **(ஆ) மாநில தேர்தல் ஆணையம்**

(இ) உள்ளாட்சி அமைப்புகள் (ஈ) அரசாங்கம்

83. பின்வரும் பட்டியல் I & II பொருத்தி சரியானவற்றை தேர்ந்தெடுக்கவும்

பட்டியல் I பட்டியல் II

(அ) இந்திய விவாகரத்து சட்டம் 1. 1869

(ஆ) இந்து திருமண சட்டம் 2. 1955

(இ) சிறப்பு திருமண சட்டம் 3. 1954

(ஈ) வெளிநாடுவாழ் திருமண சட்டம் 4. 1969

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 3 | 2 | 1 |
| ஆ. | 3 | 4 | 1 | 2 |
| இ. | 2 | 1 | 4 | 3 |

ஈ. 1 2 3 4

84. கீழ்காணும் ஜோடிகளில் சரியாகப் பொருந்தி உள்ளதை தேர்ந்தெடுக்கவும்:
1. முகவுரை – அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதியல்ல
2. அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் – அரசின் கடமை
3. அடிப்படைக் கடமைகள் – பாராளுமன்றத்தின் கடமை
4. அடிப்படை உரிமைகள் – குடிமகனின் கடமைகள்
(அ) 1 **(ஆ) 2** (இ) 3 (ஈ) 4

85. கீழ்கண்ட எந்த வழக்கில் உச்ச நீதிமன்றம், அடிப்படை உரிமைகள் மீதான நாடாளுமன்றத்தின் சட்ட திருத்த அதிகாரத்தை வரையறுத்தது?
(அ) A.K.கோபாலன் வழக்கு (ஆ) M.C.மேத்தா வழக்கு
**(இ) கேசவானந்த பாரதி வழக்கு** (ஈ) கோலக்நாத் வழக்கு

86. கீழ்க்காணும் எந்த வழக்கின் தீர்ப்பில் உச்சநீதிமன்றம் அரசியலமைப்பின் முகவுரையை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியாக கருதவேண்டும் என தீர்ப்பளித்தது?
(அ) பெருபெரி வழக்கு 1960 (ஆ) கோலக் நாத் வழக்கு 1967
**(இ) கேசவானந்த பாரதி வழக்கு 1973** (ஈ) எஸ்.ஆர்.பொம்மை வழக்கு 1994

87. ஏற்றுமதி இறக்குமதி கொள்கை உருவான ஆண்டு
(அ) 1983 (ஆ) 1954 **(ஈ) 1985** (ஈ) 1986

88. PMRY என்பது என்ன?
(அ) Prime Minister Rural Yojana (ஆ) Prime Minister Regional Yojana
**(இ) Prime Minister Rozgar Yojana** (ஈ) Prime Minister Rashtriya Yojana

89. பிறழ்ச்சி வேலையின்மை என்பது இதன் வெளிப்பாடு
(அ) தொழிலாளர்கள் தற்பொழுது உள்ள கூலியை ஏற்றுக் கொள்ளாத பொழுது
**(ஆ) ஒரு நாட்டின் தன்னார்வ வேலையின்மையின் மாற்றம்**
(இ) தொழிலாளர்கள் இடம்பெயர விருப்பம் இல்லாத பொழுது
(ஈ) தொழிலாளர்கள் அறியாமையில் இருக்கும் பொழுது

90. -------- அரசியலமைப்பின் 280வது பிரிவின் கீழ் அமைக்கப்பட்டுள்ளது
(அ) மத்திய கண்காணிப்பு ஆணையம் **(ஆ) நிதி ஆணையம்**
(இ) பெண்களுக்கான தேசிய ஆணையம் (ஈ) இந்திய அரசுத் தலைமை வழக்குரைஞர்

91. இந்தியப் பண அங்காடியில் உள்ள குறைகள்
1. ஒருங்கிணைப்பு இன்மை.
2. பல்வேறு விதமான பண வட்டி விதம்.
3. பில்அங்காடி இன்மை
(அ) 1 மற்றும் 2 **(ஆ) 1, 2 மற்றும் 3** (இ) 1 மற்றும் 3 (ஈ) 1 அல்ல 2, 3 அல்ல

92. இந்திய திட்டங்களின் முதலாவது செயல் வடிவு திட்டம் வடிவமைத்த பெருமை இவரை சாரும்
(அ) J.N.நேரு **(ஆ) விஸ்வேஸ்வரய்யா** (இ) J.R.D.டாடா (ஈ) லாலா ஸ்ரீராம்

93. முதலாவது தொழில் கொள்கை தீர்மானம் அறிவிக்கப்பட்ட ஆண்டு
**(அ) 1948** (ஆ) 1949 (இ) 1952 (ஈ) 1956

94. இந்திய தேசிய காங்கிரஸின் "பாதுகாப்பு வால்வு கோட்பாடு" என்ற கருத்து எங்கிருந்து உருவானது?
(அ) டபிள்யூ.சி.பானர்ஜி **(ஆ) வில்லியம் வெடர்பர்ன்**
(இ) டப்ரின் பிரபு (ஈ) சி.எஃப்.ஆண்டரூஸ்

95. விவசாயிகள் அன்னிய நுகத்தடியிலிருந்து மட்டுமல்லாமல், நிலபிரபுக்கள், முதலாளிகள் ஆகியோரின் நுகத்தடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டுமென --------- எழுதினார்
**(அ) பகத்சிங்** (ஆ) ராஜகுரு (இ) சுக்தேவ் (ஈ) சூர்யாசென்

96. பின்வரும் நிகழ்வுகளை பொருத்துக:
அ. வைசாக் புரட்சி 1. 1929-1930
ஆ, சௌரி சௌரா 2. 1918
இ. பர்தோலி சத்யாகிரகம் 3. 1923
ஈ. கைரா சத்யாகிரகம் 4. 1922

| | அ | ஆ | இ | ஈ |
|---|---|---|---|---|
| அ. | 4 | 3 | 2 | 1 |
| **ஆ.** | **3** | **4** | **1** | **2** |
| இ. | 2 | 4 | 3 | 1 |
| ஈ. | 4 | 2 | 3 | 1 |

97. "சத்தியத்துடனான எனது சோதனைகளின் கதை" ----------ன் சுயசரிதை
**(அ) மகாத்மா காந்தி** (ஆ) மௌலானா அபுல் கலாம் ஆசாத்
(இ) ஜவஹாலால் நேரு (ஈ) சர் சையித் அகமது கான்

98. பெரியார் ஈ.வெ.ராமசாமி நாயக்கர் ஐக்கிய ரஷ்யா பயணத்திற்கு பிறகு 1932-ல் எந்த இடத்தில் "ஸ்டாலின் மண்டபத்தை" கட்டினார்
(அ) கடலூர் **(ஆ) கோயமுத்தூர்** (இ) ஈரோடு (ஈ) மதுரை

99. வேலன்டைன் சிரோல் என்பவரால் "இந்தியா கிளர்ச்சியின் தந்தை" என்று அழைக்கப்பட்டவர் யார்?
(அ) லாலா லஜபதி ராய் (ஆ) அரவிந்த கோஷ்
(இ) பிபின் சந்திர பால் **(ஈ) பால கங்காதர திலக்**

100. "நீல் தர்பன்" என்ற நாடகத்தின் கருபொருள் என்ன?
**(அ) தோட்ட தொழிலாளர்களின் துயரம்** (ஆ) மீனவர்கள் துயரம்
(இ) வணிகர்களின் துயரம் (ஈ) வீரர்களின் துயரம்

winmeen.com